(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC. NO.71/2018

**Depostitions of PW- 5 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முனியாண்டி | Caste | |
| Father's name | மலைச்சாமி | Calling | ரோட்டு வேலை |
| Village | சிவகிரி | Religion | |
| Taluk | தென்காசி | Age. | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of May- 2024.

Signature of Witness.

23.05.2024

எதிரி ஆஜர்

முதல் விசாரணை–

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து ரோட்டு வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கொத்தாளமுத்துவை எனக்கு தெரியாது. தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதிய நேரத்தில் நான் ஒரு இடத்திலுள்ள தார் ரோட்டில் ரோடு வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். அந்த இடம் எந்த இடம் என்று எனக்கு தெரியாது. அப்போது அந்த இடத்தில் இருந்து 100 மீட்டர் தள்ளி விபத்து நடந்ததாக கேள்விப்பட்டேன். என்ன விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது. மறு நாள் வந்து என்னை போலீசார் விபத்து நடந்தது சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சியை திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய தலைமை காவலர் எண்.2294 திரு.கே. பொன் மகேஷ்குமார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்,**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

2. கடந்த 28.03.2017 ம் தேதி காலை 11.30 மணிக்கு TN 67 N 0409 அரசு பேருந்து மதுரை ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்தபோது அந்த இடத்தில் உள்ள தார் ரோட்டில் நான் ரோட்டு வேலை செய்து கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரிதான். அப்போது மேற்படி பேருந்திற்கு வலது பக்கம் ஆஜர் எதிரி TN 67 AQ 4847 என்ற எண்கொண்ட ஹோண்டா சைன் இருசக்கர வாகனத்தின் பின்னால் அவரது அம்மா கூடம்மாளை உட்கார வைத்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும், தலையில் ஹெல்மெட் இல்லாமலும் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல.

3. அவ்வாறு ஓட்டி வந்து ஆஜர் எதிரி அந்த பஸ்சை ஓவர் டேக் செய்ய முயற்சி செய்து பஸ்சின் வலது பக்கத்தில் மோதி கீழே விழுந்து இருசக்கர வாகனத்திற்கு பின்னால் இருந்த அவரது அம்மா கூடம்மாவுக்கு தலை மற்றும் கை, கால்களில் காயம் ஏற்பட்டு அவருக்கு இறப்பை ஏற்படுத்திய சம்பவத்தினை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—</u>**

4.எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.